OS 32/2019
வா.சா.1 சுரேஷ்குமார் த/பெ கோதண்டன்
நாள் 23.09.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் இந்த வழக்கின் 5ம் வாதி ஆவேன். எனது அப்பா கோதண்டன் இறந்துவிட்டதால் அவரின் வாரிசுகள் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கை எனது அப்பா தாக்கல் செய்ததால் வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் தெரியும். எதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் காசோலை வழங்கி பணம் வாங்கியதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எவ்வளவு தொகைக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ரூ.2,50,000/- க்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எத்தனை காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது என்றால் 5 காசோலைகள் ஒவ்வொன்றும் ரூ.50,000/-க்கு வழங்கப்பட்டுள்ளது. காசோலை தேதி சொல்லமுடியுமா என்றால் 15.02.2016, 20.02.2016, 28.02.2016, 15.03.2016, 30.03.2016 ஆகிய தேதிகளில் காசோலை வழங்கப்பட்டுள்ளது. எனது அப்பா என்ன தொழில் செய்தார் என்றால் பட்டு தொழில் செய்தார் தெரிந்தவர்களுக்கு பைனான்ஸ் கொடுப்பார். ஒருசிலருக்கு கொடுக்கல் வாங்கல் பணம் கொடுப்பார்.

2. பிரதிவாதி எவ்வாறு பழக்கம் என்றால் அவரும் பட்டு தொழில் செய்கிறார் அதன் பேரில் வாங்கினார். பணம் கொடுக்கும் போது காசோலை வாங்கினோமா என்றால் ஆமாம். எங்கு வைத்து பணம் கொடுக்கப்பட்டது என்றால் எங்கள் வீட்டில் வைத்து பணம் கொடுத்தோம். நான் மேலே சொன்ன விவரங்களை எனது அப்பா தாக்கல் செய்துள்ள வழக்குரையில் விவரம் சொல்லவில்லை என்றால் அதுபற்றி விவரம் எனக்கு தெரியாது வீட்டில் வைத்து பணம் கொடுத்ததாக அப்பா சொன்னார். பிரதிவாதி யாருடைய பெயருக்கு காசோலை வழங்கினார் என்றால் அப்பா பெயருக்கு வழங்கினார். பிரதிவாதி வழங்கிய காசோலை எந்த வங்கியின் காசோலை என்று எனக்கு தெரியுமா என்றால் ஆரணி கிளை ஐடிபிஐ வங்கி காசோலை ஆகும். காசோலைகளை வங்கியில் பணமாக்குவதற்காக செலுத்தினோமா என்றால் இல்லை. எனது அப்பா பைனான்ஸ் செய்துள்ள நிலையில் காசோலையை தேதி தவறியதால் பணமாக்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அறிவிப்பு கொடுத்தோமா என்றால் 2017 ஆண்டு 5ம் மாதத்தில் கொடுத்தோம். இந்த வழக்கை எந்த வருடம் தாக்கல் செய்தோம் என்றால் 2019ம் வருடம் தாக்கல் செய்துள்ளோம். 5 வழக்கு காசோலைகளில் உள்ள தேதி விவரங்கள் 5 அல்லது 10 நாட்கள் வித்தியாசம் உடைய காசோலைகள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 5 காசோலைகளில் பெயர், தொகை விவரம், கையொப்பம் ஆகியவை வித்தியாசமாக உள்ளது என்றால் இல்லை நார்மலாக தான் உள்ளது. 5 காசோலைகளில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல பிரதிவாதிக்கு தமிழ் மொழி தெரியாது என்றாலும் ஆங்கிலம், கன்னடம் மட்டுமே தெரியும் என்றாலும் சரியல்ல. உண்மையில் பிரதிவாதி பணம் வாங்கி காசோலை கொடுத்திருந்தால் அந்த காசோலையை பணமாக்குவதற்காக வங்கியில் போட்டிருப்போம் என்றால் பிரதிவாதி 3மாதம் அவகாசம் கேட்டதால் போடவில்லை. 2017ம் ஆண்டு அறிவிப்பு அனுப்பிவிட்டு 2019ல் காசோலையை மோசடியாக தயார் செய்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. பிரதிவாதி 2013ம் வருடம் ரூ.20,000/- கடன் வாங்கிக்கொண்டு பூர்த்தி செய்யப்படாத காசோலைகளை கொடுத்தார் என்றும் அந்த கடனை திருப்பி கொடுத்துவிட்டார் என்றும் காசோலைகளை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியும் பட்டு தொழில் செய்வதால் நம்பிக்கையின் பெயரில் காசோலைகளை திரும்ப பெறாமல் விட்டுவிட்டார் என்றால் சரியல்ல. 08.05.2017ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியபிறகு அதனை பெற்றுக்கொண்ட பிரதிவாதி நேரடியாக வந்து அறிவிப்பு குறித்து கேட்டபோது அது ஒரு வழக்கமான நடைமுறை என்று கூறியுள்ளோம் என்றால் சரியல்ல. காசோலைகளை வங்கியில் செலுத்தியிருந்தால் கையொப்பம் மாறுபாடாக உள்ளது என்று காசோலை திரும்பிவிடும் என்பதால் காசோலைகளை வங்கியில் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலைகளை மோசடியாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.